# தமிழக அரசியல்-பண்பாடு

## மாநில அளவிலான கள ஆய்வு முடிவுகள்

### *ஆய்வுப் பின்னணி*

லொயோலா கல்லூரியின் ஊடக ஆய்வியல் புலத்துடன் இணைந்த காட்சித் தகவலியல் துறை, தமிழக மக்களின் பண்பாட்டு-அரசியல் தளங்களில் நிகழ்ந்துவரும் ஒருங்கிணைந்த மாற்றங்களின் போக்குகளை மாநில அளவிலான கள ஆய்வுகள் மூலம் தொடர்ந்து பதிவுசெய்து வருகிறது. கல்விநிலையப் பின்புலத்தில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வுகள் நூலகங்களில் நுடங்கிவிடாமல் மீண்டும் மக்களிடம் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்ற நோக்கத்தில், ஒவ்வொரு சுற்று ஆய்வின் முடிவிலும் ஊடகத்துறையினர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதோடு, மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கான ஆய்வரங்கங்களும் நடத்தப்படுகின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின், ஏற்கெனவே நடந்துள்ள மூன்று சுற்று மாநில அளவிலான ஆய்வுகளைத் தொடர்ந்து (நவம்பர் 2004, ஏப்ரல்-மே 2005, நவம்பர் 2005-ஜனவரி 2006), எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலின் பின்புலத்தில் மற்றொரு சுற்று களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏப்ரல் 5 முதல் 15 வரை நடைபெற்ற இந்த ஆய்வின் பல்வேறு நிலைகளில் இரண்டு பேராசிரியர்கள், மூன்று களஆய்வு ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் 29 மாணவர்கள் ஈடுபட்டனர். நீலகிரி தவிர்த்த தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மொத்தம் 122 சட்டமன்றத் தொகுதிகளில் 5058 பேரைச் சந்தித்துக் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, ***பேரா. டாக்டர் ராஜநாயகம்*** உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டுள்ளது.

### *பங்கேற்றோர் பின்னணி*

களஆய்வில் பங்கேற்றோரில் மிகப் பெரும்பாலோர் (91.7) ஆண்கள். [கணிப்பு நடைபெற்ற பெரும்பாலான பொது இடங்களில் பெண்களின் வருகை மிகக் குறைவாக இருந்தது, “வேற்று” நபருடன் “நெடுநேரம்” (10-15 நிமிடங்கள்) பேசுவதில் பல பெண்களுக்குள்ள இயல்பான தயக்கம், அப்படியே சில பெண்கள் முன்வந்தாலும் அவர்கள் வீட்டு ஆண்களின் அதிகப்படியான குறுக்கீடு, ஆய்வுக் குழுவில் ஆண்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தது ஆகியவை பெண்கள் குறைவாகப் பங்கேற்க முக்கியக் காரணங்கள்.] பெண்களில் நான்கில் ஒரு பங்கு (25.1) சுய உதவிக் குழு உறுப்பினர்கள்.

வயதுரீதியாக, பெரும்பாலோர் (43.5) 31 முதல் 45 வரையிலான வயதினர் (20 வயது வரை - 1.7, வயது 21 முதல் 30 வரை - 27.1, வயது 46 முதல் 60 வரை - 22.6, மீதி - வயது 61-க்கு மேல்). சாதிரீதியாக, தாழ்த்தப்பட்டோர் - 21.5, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 16.9, பிற்படுத்தப்பட்டோர் - 46.7 (மீதி - பிற இனத்தினர் / சொல்ல விரும்பாதோர்).

மதரீதியாக, இந்து மதத்தினர் - 85.8, கிறிஸ்தவர் - 4.3, இஸ்லாமியர் - 7.5 (மீதி - பிற மதத்தினர் / சொல்ல விரும்பாதோர்). கல்வியைப் பொருத்த மட்டில், பெரும்பாலோர் (55.7) வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள் (உயர்கல்வி - 17.7, வகுப்பு 5 வரை - 12.8, மீதி - படிக்காதவர்கள் / சொல்ல விரும்பாதோர்).

தொழில்ரீதியாக, பெரும்பாலோர் (43.6) சொந்தத் தொழில் செய்பவர்கள் (விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் - 26.5, தனியார் நிறுவனம் - 17.4, அரசு ஊழியர் - 4.5, மாணவர் - 2.0, இல்லத்தரசியர் - 1.7, மீதி - வேலையற்றோர் / வேறு வேலைகள்).

## தேர்தல் பிரச்சாரக் களம்

### (1) தேர்தல் வியூகம்:

அரசியல் கட்சிகளின் தேர்தல் வியூகத்தில் கீழ் வரும் பத்து அம்சங்களைக் குறித்து, கட்சி விருப்பு-வெறுப்புகளுக்கு அப்பால் கருத்துத் தெரிவிக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். பெரும்பாலான மக்களின் பார்வையில், திமுக மற்றும் அதிமுக அணிகளின் தேர்தல் வியூகங்கள் ஏறத்தாழச் சம அளவில் சிறப்பாக அமைந்துள்ளன. இவற்றுக்கு அடுத்ததாக, அனைத்து அம்சங்களிலும் சராசரி 20-க்கும் சற்று அதிகமானோர் தேமுதிக-வின் வியூகம் சிறப்பாக உள்ளதாகக் கருதுகின்றனர்.

| தேர்தல் வியூகம் | திமுக அணி | அதிமுக அணி |
|---|---|---|
| தேர்தல் அறிக்கை | 59.4 | 58.6 |
| **சுமுகமான தொகுதிப் பங்கீடு** | **44.1** | **44.3** |
| சரியான வேட்பாளர்கள் தேர்வு | 47.8 | 47.2 |
| **உட்கட்சிப் பூசல்கள் இன்மை** | **43.2** | **43.4** |
| சிறுபான்மையினர் ஆதரவு | 47.1 | 44.7 |
| **டி.வி./பத்திரிக்கை விளம்பரம்** | **43.3** | **43.1** |
| சுவர்/சுவரொட்டி/பேனர் | 43.1 | 43.9 |
| **தெருமுனை/பொதுக் கூட்டம்** | **43.4** | **43.4** |
| வாக்காளருடன் நேரடிச் சந்திப்பு | 42.5 | 42.9 |
| **தலைவர்களின் பிரச்சாரம்** | **43.2** | **43.4** |

### (2) நடுநிலை ஊடகம்:

வரும் சட்டமன்றத் தேர்தலையொட்டிய செய்திகளை நடுநிலையில் தரும் ஊடகங்களைப் பற்றிய மக்களின் கருத்து:

*(அ) தொலைக்காட்சி:*

சன் - 35.6, பொதிகை/டிடி - 18.6, ராஜ் - 6.6, ஜெயா - 6.4,
சன் நியூஸ் - 4.4, விஜய் - 3.0, விண் - 1.1, எதுவுமில்லை - 20.0

*(ஆ) நாளிதழ்:*

தினத்தந்தி - 25.5, தினமலர் - 15.8, தினகரன் - 15.7, தினமணி - 6.0,
எதுவுமில்லை - 33.6

*(இ) வார /வாரமிரு இதழ்:*

குங்குமம் - 8.1, குமுதம் - 6.2, ஆனந்த விகடன் - 2.8,
ஜூனியர் விகடன் - 2.7, நக்கீரன் - 2.0, எதுவுமில்லை - 75.6

### (3) தேர்தல் அறம்:

ஒரு வேட்பாளரிடம் பணம் வாங்கிக்கொண்டு அவருக்கு வாக்களிப்பது தவறு என மிகப் பெரும்பாலோர் (86.9) கருதினாலும், ஒருவரிடம் பணம் வாங்கிக்கொண்டு வேறொருவருக்கு வாக்களிப்பது தவறு எனக் கருதுவோர் அதைவிட அதிகம் (93.0).

எனினும், பணம் வாங்கிக்கொண்டு வாக்களிப்பதில் தவறில்லை எனக் கருதுவோர் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பது கவனத்திற்குரியது (பணம் தந்தவருக்கே வாக்களிப்பது - 13.1, வேறொருவருக்கு வாக்களிப்பது - 7.0). திமுக, அதிமுக அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவும் சூழ்நிலையில் இவர்களது வாக்கு முக்கியமானதாக அமையக்கூடும்.

### (4) தேர்தலில் திரையுலகம்:

திரைப்பட நடிகை/நடிகர்களின் அரசியல் நுழைவைப் பெரும்பாலோர் வரவேற்கவில்லை. இவர்களது அரசியல் செயல்பாடுகளின் அளவு அதிகரிப்பதற்கேற்ப எதிர்ப்பும் அதிகமாகப் பதிவாகிறது.

| நடிகர்களின் அரசியல் ஈடுபாடு | எதிர்ப்பு |
|---|---|
| ஒரு கட்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வது | 55.1 |
| **ஒரு கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுவது** | **60.3** |
| தானே சொந்தமாகக் கட்சி தொடங்குவது | 61.8 |

***(5) ரஜினியின் ஆதரவும் தாக்கமும்:***

வரும் தேர்தலில் ரஜினிகாந்த் யாரை ஆதரிக்கக்கூடும் என்ற கேள்விக்கு, அவரது கவனமெல்லாம் இப்போது “சிவாஜி” படத்திலேயே இருப்பதால் வெளிப்படையாக யாரையும் ஆதரிக்க மாட்டார் எனப் பாதிக்கும் மேற்பட்டோர் (52.2) தெரிவித்துள்ளனர். அவர் அதிமுக அணியை ஆதரிப்பார் (18.9) என்பது குறிப்பிடத்தக்க மற்றொரு கருத்து (மீதி - வேறு பதில்கள்).

ஒருவேளை, ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ரஜினிகாந்த் தனது ஆதரவை வெளிப்படுத்தும் பட்சத்தில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நடந்தது போலவே இப்போதும் எந்தத் தாக்கமும் இருக்காது (32.0), அவர் பேச்சைக் கேட்கும் நிலையில் அவருடைய ரசிகர்கள் இல்லை (29.2) ஆகிய கருத்துக்கள் அழுத்தம் பெறுகின்றன. அவர் ஆதரிக்கும் அணி பெரும்பான்மை இடங்களை வெல்லும் என்ற கருத்துக்கும் ஓரளவு (16.4) ஆதரவு உள்ளது.

***(6) தேர்தல் ஆணையம்:***

வரும் சட்டமன்றத் தேர்தலைப் பொருத்தவரை, தேர்தல் ஆணையம் மிகப் பொறுப்பாகப் பாரபட்சமற்றுச் செயல்படுவதாக நான்கில் மூன்று பங்குக்கு மேலானோர் (77.7) தெரிவித்துள்ளனர். தன்னுடைய அதிகார வரம்பை மீறிய கண்டிப்புடன் செயல்படுகிறது (9.7), அதன் செயல்பாடுகளில் நிறையக் குளறுபடிகள் உள்ளன (6.9) ஆகியவை பிற குறிப்பிடத்தக்க கருத்துக்கள்.

## *வாக்களிப்பது குறித்த மக்கள் கண்ணோட்டம்*

***(7) தொகுதியின் முக்கியப் பிரச்சனை:***

தங்கள் தொகுதியின் மிக முக்கிய பிரச்சனையாக, போக்குவரத்து வசதி இல்லாதது (15.9), குடிதண்ணீர் வசதி இல்லாதது (14.6), வேலையில்லாத் திண்டாட்டம் (13.2), தொழில் வளர்ச்சி இல்லாதது (8.5), விலைவாசி உயர்வு (6.7), மருத்துவ-சுகாதார வசதி இல்லாதது (6.6) ஆகியவை முன்வைக்கப் படுகின்றன.

எந்த அணியின் வேட்பாளர் ஜெயித்தாலும் தங்கள் தொகுதியின் பிரச்சனை தீரப் போவதில்லை என்பது பெரும்பான்மைக் கருத்தாக (31.4) இருந்தாலும், திமுக மற்றும் அதிமுக அணிகளால் முடியும் என ஏறத்தாழச் சம அளவினர் கருதுகின்றனர் (திமுக அணி - 29.8, அதிமுக அணி - 28.2, தேமுதிக - 8.5).

***(8) சுய உதவிக் குழுவினரின் ஆதரவு:***

தங்கள் ஊரிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுவினரின் ஆதரவு அதிமுக-வுக்கே அதிகம் என்பது பெரும்பான்மை ஊகமாக (45.1) இருந்தாலும், ஏறத்தாழ அதற்குச் சமமாக (43.3) எந்தக் கட்சிக்கும் அவர்கள் ஆதரவு இல்லை என்ற ஊகமும் முக்கியத்துவம் பெறுகிறது. திமுக-வுக்கு ஆதரவுள்ளதாக ஊகிப்போர் 7.0 மட்டுமே.

எனினும், சுய உதவிக் குழு உறுப்பினராக உள்ள பெண்கள் எந்த அணிக்கு வாக்களிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள் என்பதை ஆராயும்போது, அவர்களின் ஆதரவு அதிமுக அணிக்கு அதிகம் (68.1) இருந்தாலும், திமுக அணிக்கும் கணிசமான ஆதரவு (23.2) வெளிப்படுகிறது. (சுய உதவிக் குழு உறுப்பினராக இல்லாத பெண்களைப் பொருத்த வரை அவர்களது வாக்கு: அதிமுக அணிக்கு 45.7, திமுக அணிக்கு 37.4.)

***(9) யாருக்கு வாக்கு...?***

தற்போதுள்ள அரசியல் சூழலில், இன்று வாக்களிப்பதாக இருந்தால் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பீர்கள் என்ற கேள்விக்கான பதில்:

***(அ) தனிப்பட்ட கட்சிகள் என்ற அளவில்:*** அதிமுக - 38.5, திமுக - 36.0, காங்கிரஸ் - 4.5, சிபிஐ/எம் - 2.1, பாமக - 1.8, மதிமுக - 1.2, தேமுதிக - 12.3, பாஜக - 0.5, வி.சிறுத்தை - 0.3, மீதி - பிறர் & முடிவுசெய்யாதோர்.

இந்த முடிவுகளை இதற்கு முந்தைய கணிப்புகளோடு ஒப்பிட்டால், அதிமுக-வின் வாக்கு சீராக உயர்ந்து, தற்போது திமுக-வை முந்தியிருப்பது புலப்படும்.

| | ***அதிமுக*** | ***திமுக*** |
|---|---|---|
| ***ஏப்ரல் 2006*** | 38.5 | 36.0 |
| ***ஜனவரி 2006*** | 33.7 | 38.4 |
| ***மே 2005*** | 30.1 | 46.6 |
| ***நவம்பர் 2004*** | 19.0 | 41.7 |

***(ஆ) கூட்டணிகள் என்ற அளவில்:***

| | |
|---|---|
| திமுக அணி | 44.5 |
| அதிமுக அணி | 40.1 |
| தேமுதிக | 12.3 |
| பிறர் | 1.5 |
| முடிவுசெய்யாதோர் | 1.6 |

கடந்த ஜனவரி கணிப்போடு ஒப்பிடுகையில், அப்போதைய திமுக அணியின் பலம் (மதிமுக தவிர்த்து) தற்போது சிறிதளவு குறைந்துள்ளது (ஜனவரி - 46.0) கவனிக்கத்தக்கது.

***(10) பாலியல்ரீதியாக வாக்கு:***

பாலியல்ரீதியாக, பெண்களின் வாக்கு பெருவாரியாக அதிமுக அணிக்கும், ஆண்களின் வாக்கு திமுக அணிக்கும் சாதகமாக அமைந்துள்ளன.

| | ***திமுக*** | ***அதிமுக*** | ***தேமுதிக*** |
|---|---|---|---|
| *பெண்கள்* | 31.7 | 55.4 | 11.2 |
| *ஆண்கள்* | 45.8 | 38.6 | 12.4 |

***(11) தொழில்ரீதியாக வாக்கு:***

| | |
|---|---|
| விவசாயம் / கூலி வேலை | : திமுக - 39.7, அதிமுக - 45.4 |
| சுயதொழில் | : திமுக - 45.1, அதிமுக - 39.9 |
| தனியார் துறையில் மாத ஊதியம் | : திமுக - 44.5, அதிமுக - 35.3 |
| அரசு ஊழியர் | : திமுக - 62.5, அதிமுக - 28.3 |
| இல்லத்தரசியர் | : திமுக - 41.1, அதிமுக - 50.0 |

விவசாயம் மற்றும் கூலிவேலை செய்வோரிடையே அதிமுக-வுக்குச் சற்று அதிகமாகவும், அரசு ஊழியரிடையே திமுக-வுக்கு மிக அதிகமாகவும் செல்வாக்கு உள்ளது.

***(12) மதரீதியாக வாக்கு:***

தமிழகத்தின் பெருவாரி மக்களாக இந்து மதத்தினரிடையே திமுக மற்றும் அதிமுக அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகிறது (திமுக - 42.5, அதிமுக - 41.4). எனினும், சிறுபான்மையினரிடையே திமுக அணிக்கு அதிக செல்வாக்குள்ளது.

| | |
|---|---|
| இஸ்லாமியர் | : திமுக - 54.9, அதிமுக - 29.6 |
| கிறிஸ்தவர் | : திமுக - 63.9, அதிமுக - 29.2 |

### *(13) சாதிரீதியாக வாக்கு:*

சாதிரீதியாக, சில அதிமுக அணிக்கும், பிற திமுக அணிக்கும் சாதகமாக அமைந்துள்ளன.

| சாதி | அதிமுக | திமுக |
|---|---|---|
| ஆதி திராவிடர் | 45.8 | 41.3 |
| **தேவேந்திரகுல வேளாளர்** | **30.8** | **47.9** |
| பிராமணர் | 26.8 | 51.2 |
| **வன்னியர்** | **33.5** | **49.9** |
| நாயுடு/ரெட்டி | 48.4 | 36.0 |
| **முக்குலத்தோர்** | **50.6** | **35.2** |
| கோனார் | 37.2 | 53.8 |
| **செட்டியார்** | **41.4** | **43.1** |
| உடையார் | 46.7 | 43.3 |
| **பிள்ளை** | **43.6** | **44.2** |
| முத்தரையர் | 45.0 | 42.5 |
| **முதலியார்** | **31.9** | **46.9** |
| கவுண்டர் | 39.7 | 41.2 |
| **நாடார்** | **30.7** | **55.1** |

இந்தக் கணிப்பு, நடிகர் சரத் குமார் அதிமுக-வில் சேர்வதற்கு முன்னால் நிகழ்ந்தது என்பதால், நாடார் இன மக்களின் வாக்கு தற்போது மாறியிருக்கவும் வாய்ப்புண்டு.

### *(14) படிப்புரீதியாக வாக்கு:*

படிப்பறிவில்லாதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்வி வரை பயின்றுள்ளவர்கள் மத்தியில் அதிமுக அணிக்கும், அதற்கு மேல் கற்றுள்ளவர்கள் மத்தியில் திமுக அணிக்கும் செல்வாக்குள்ளது.

| | |
|---|---|
| படிக்காதவர்கள் | : திமுக - 31.8, அதிமுக - 55.6 |
| ஐந்தாம் வகுப்பு வரை | : திமுக - 40.7, அதிமுக - 47.2 |
| ஆறு முதல் 12-ம் வகுப்பு வரை | : திமுக - 47.1, அதிமுக - 36.9 |
| கல்லூரி/உயர் கல்வி | : திமுக - 47.3, அதிமுக - 34.2 |

### *(15) நான்கு சிறப்புத் தொகுதிகள்:*

சேப்பாக்கம், ஆண்டிபட்டி, விருத்தாச்சலம், பென்னாகரம் ஆகிய நான்கு தொகுதிகளிலும் கணிப்பின் போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. ஆண்டிபட்டி ஜெயலலிதாவுக்கும் சேப்பாக்கம் கருணாநிதிக்கும் சாதகமாக உள்ளன. விருத்தாச்சலத்தில் அதிமுக-வுக்கும் தேமுதிக-வுக்குமிடையே கடும் போட்டி நிலவுகிறது. வீரப்பன் மனைவி முத்துலட்சுமி சுயேட்சையாய்க் களமிறங்கிய இரு நாள்களுக்குள், பென்னாகரத்தில் திமுக பின்னுக்குத் தள்ளப்பட்டு, முத்துலட்சுமிக்கும் அதிமுக-வுக்குமிடையே போட்டி கடுமையாகும் சூழல் உருவாகி வருகிறது.

### *(16) ஆட்சியில் எந்த அணி...?*

வரும் தேர்தலில் அதிமுக அணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றும் எனக் கருதுவோர் 43.8 (அதிமுக தனித்து - 23.5, அணியாக - 20.3), திமுக-வுக்கு அந்த வாய்ப்பு இருப்பதாகக் கருதுவோர் 42.3 (திமுக தனித்து - 16.4, அணியாக - 25.9).

கணிப்பில் கலந்துகொண்டவர்கள் வாக்களிக்கும் முடிவிற்கும், எந்தக் கட்சி/அணி வெல்லும் என்ற ஊகத்திற்கும் இடைவெளி இருப்பது கவனிக்கத்தக்கது.

| | வாக்கு | ஊகம் |
|---|---|---|
| திமுக அணி | 44.5 | 42.3 |
| அதிமுக அணி | 40.1 | 43.8 |
| தேமுதிக | 12.3 | 7.2 |

அரசியல் கட்சிகளின் பிரச்சார வியூகம் பற்றிய கருத்து, வாக்களிக்கும் விதம், நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தனிப்பட்ட கட்சி என்ற அளவில் அதிமுக-வுக்குச் சீராகப் பெருகி வரும் ஆதரவு, யார் பெரும்பான்மை பெறுவார் என்பது பற்றிய மக்களின் ஊகம், திமுக அணிக்கு வாக்களிப்போரிடையே வெளிப்படும் சிறிதளவு தன்னம்பிக்கைக் குறைவு, கணிப்பில் மிக மிகக் குறைந்த அளவில் பெண்களின் பங்கேற்பு, கணிப்புக்குப் பின் நடந்துள்ள/நடைபெற்று வரும் நிகழ்வுகள் (எடுத்துக்காட்டாக, சரத் குமார் அதிமுக-வில் இணைந்தது, விஜய டி. ராஜேந்தருக்கு திமுக விடுத்துள்ள அழைப்பு முதலியவை) ஆகிய பல்வேறு அம்சங்களை ஒத்து நோக்கினால், கணிப்பு நடைபெற்ற கால கட்டத்தில் எந்தக் கட்சிக்கோ அணிக்கோ ஆதரவாக எந்த "அலை"யும் வீசவில்லை என்பதோடு, திமுக மற்றும் அதிமுக அணிகளுக்கிடையே கடுமையான போட்டி நிலவுகிறது. இதனால், எந்த அணிக்கு எத்தனை இடங்கள் என்பதைத் தற்போதைய கணிப்பை மட்டும் வைத்து துல்லியமாகக் கணித்துச் சொல்ல இயலாது.

***(17) கருத்துக் கணிப்புகள் பற்றிய கணிப்பு:***

கருத்துக் கணிப்புக்கள், வாக்காளர்கள் தெளிந்த முடிவெடுக்கவும் (40.3), மக்களின் மனநிலையை அறிந்துகொள்ளவும் (37.2) உதவுவதாகப் பெரும்பாலோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். நடுநிலையான கணிப்பு மட்டுமே வரவேற்கத் தக்கது (12.9), மக்களைக் குழப்புவதாகக் கணிப்புகள் உள்ளன (5.5) ஆகியவையும் குறிப்பிடத்தக்க பதில்கள். கணிப்புகளை ஒட்டுமொத்தமாகத் தடைசெய்ய வேண்டும் என்போர் வெறும் 1.0 மட்டுமே.

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
21 ஏப்ரல் 2006

*கவனத்திற்கு:* மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.

**நன்றி**

ஆய்வின் பல்வேறு நிலைகளில் பங்கேற்ற அனைவருக்கும்